T/300/0199 0199

# பேரறிஞர் அண்ணாவின் தேன்துளிகள்!



சிருஷ்டி இலக்கிய வாசகர் வட்ட வெளியீடு

தொகுப்பாசிரியர்

திரு. வித்தகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tl300/0199
300
01 149.

# சமர்ப்பணம்

தமிழ் மொழிக்காக இன்னுயிர் ஈந்த தியாகச் செம்மல்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரறிஞர் அண்ணாவின்
## "தேன் துளிகள்!"

தொகுப்பாசிரியர்:
வித்தகன்.

வெளியீடு:
சிருஷ்டி இலக்கிய வாசகர் வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரறிஞர் அண்ணாவின்
## தேன் துளிகள் :

தொகுப்பாசிரியர் :



வித்தகன்

முதற்பதிப்பு : **3-2 1977.**

விலை : ரூ. **2.50**

வெளியீடு :

சிருஷ்டி இலக்கிய வாசகர் வட்டம்.
95, புதிய சோனகத் தெரு:
கொழும்பு—12.

Printed by:
**OLYMPIC PRINTERS**
95, New Moor St, Colombo-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை:

"பேரறிஞர் அண்ணுவின் தேன்துளிகள்" என்னும் இத்தொகுப்பு நூலொன்றை வெளியிட வேண்டுமென்ற என் நெடுநாளைய உந்து சக்தியின் சிந்தனை வடிவமே இந்நூலை தொகுத்து வெளியிட கருவாக விருந்தது.

பெரும்பாலும் நூலாசிரியர்கள் தங்கள் படைப்பு உத்திகளுக்கு ஒரு தொகுப்பிலிருந்து, கருத்தோவியங்களைக் கையாளுவதன் மூலம், சிதறடித்துவிடுகிருர்கள். மற்ருெருபுறம், சிதறடிக்கப்பட்ட கருவூலங்களை ஒன்று திரட்டி, ஒரே பார்வையில் ஒரு தொகுப்பாக வெளிக்கொணரும் முனைப்புகளும் நடந்தவண்ணம் இருக்கின்றன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில், இத்தொகுப்பு நூலுக்கு தென்னகத்து வார, திங்கள், வெளியீடுகளாகிய, திருவிளக்கு, முரசொலி, முத்தாரம், தென்றல், முல்லை, திராவிட நாடு திராவிடன், இனமுழக்கம், தனியரசு, நம் நாடு, ஆகிய சஞ்சிகைகளில் அவ்வப்போது வந்த கருவூலங்களை திரட்டி எடுத்ததன் பெறுபேறே இத்தொகுப்பு நூலுருவாய் வெளிவர ஏதுவாய் அமைந்த உயிரோட்டமாகும்,

அன்றியும், ஒரு சில, திரிபுவாதிகளும், வக்கரிப்பாளர்களும் பேரறிஞர் அண்ணவை தரக்குறைவாய் மதிப்பீடு செய்யும் கண்மூடித்தனமான கயமைப் போக்கையும் போக்கடிக்க வேண்டிய கடமையும் பாரியபொறுப்பாக என்முன் கொண்டு நிறுத்தின.

இத்தொகுப்பு நூலிலிருந்து, அண்ணவின் தன்னிகரற்ற ஆற்றலின் வெளிப்பாட்டை கணிக்கும் பொறுப்பை வாசகர்களாகிய உங்களிடமே அர்ப்பணம் செய்கிறேன்.

வித்தகன்
95, புதிய சோனகத் தெரு,
கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிங்காதனம்'' என்பது ஒரு பாம்புப்புற்று' அதன் மீது அமர்வோரை அன்னார் ஏமாந்த நேரத்தில் புற்றிலி ருந்து கிளம்பும் பாம்பு பொல்லாத பற் களால் கடித்துக் கொல்லும். கொல் லாமல் எப்படி இருக்க முடியும்.

ஆருயிரம் மைல்களுக்கப்பால் உள்ள இலண்டனில் அட்லி பேசுகிறார் என்றால் கும்பகோணத்திலிருக்கும் கும் பேஸ்வரக்கபேயில் கேட்க முடிகிறதே. இது மனித விஞ்ஞானத்தால் தான் முடிந்தது.

பூகோளப்படி இந்தியா ஒரு நா டாய் இருக்கலாம், ஆனால் பூகோளத் தை விஞ்ஞானமும் இன உழுச்சியும் மாற்றி இருப்பதை யார் மறுக்க முடி யும். பூகோளத்துடன். விஞ்ஞானம் இணையவில்லை யெனில் சூயஸ் கால்வாய் ஏது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் மணங்கள் நிகழ்ந்து ஜோடிகள் சரியாக இணைந்து காதலுக்கு சாதியோ, மீதியோ, மற்ற ஏதோ தடையாக இல்லையெனில் உள்ளபடி நாட்டில் விபச்சாரம் தலை தூக்காது.

நம்மைச்சுற்றி என்ன காண்கிறோம் இன்று மெருகு குலையாத மோட்டாரில் உல்லாச சீமான் செல்கிறான். ஒருபுறம் மாட்டுக்குப்பதில் மனிதன் மார்புடைய இழுக்கிறான். பார வண்டியை மற்றோர்புறம்! இந்த முரண்பட்ட காட்சி சுதந்திர இந்தியாவில் இருக்கலாமா?

சந்திரனை தன் குரு பத்தினியுடன் கள்ளக்காதல் நடத்திய கயவனாகச் சித்தரித்து அத்துடன் திருப்தியடைந்து விட்டான் புராணிகன், ஆனால் சந்திரமண்டலத்தில் உள்ள மலைகளையும் காட்சிகளையும் கண்டறிந்து கூறுகிறான். விஞ்ஞானி இருவரில் யார் அறிவாளி?

தரணி இழந்து பரணி மறந்து தாசனாகி ஏசு தலைத்தாங்கி நிற்கும் நிலை, வளமிழந்து களம் மறந்து வாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசந்து தாழ்வடைந்துள்ள நிலை அணைந்த விளக்காய் கவிழ்ந்த கலமாய் தூர்ந்த அகழாயக்கிடக்கும் நிலை, இதுதான் தமிழனின் இன்றைய நிலை.

ஓய்வை விரும்புவோர் ஒதுங்கி நிற்கலாம். சாய்வு நாற்காலியினர் சாய்ந்து கிடக்கலாம். பதவிப் பிரியர்கள். பாதையை விட்டு விலகலாம். திராவிட இனத்தின் மானத்திற்காக உயிரையும் துறக்கும் மனப்போக்குடையோர் மட்டும் நம் முன்னணிக்கு வரலாம்.

இன்றையத்தமிழன் வாளேந்திய கரத்தோடில்லை ஆரியனின் தாளேந்திக் கிடக்கிருன். அவனிடம் இன்று செங்கோலில்லை. ஒரு சாதிக்கு மற்ருேர் சாதி எந்த அளவு மட்டம் என்பதைக் கண்டறியும் அளவுகோல் தானிருக்கிறது.

விஞ்ஞானம் குழைத்துரைக்கப் பட்ட வண்ணச் சுண்ணம் அதனைக் கொண்டு அழகான பெண்ணின் உருவையும் தீட்டலாம். கோரமான குரங்கின் உருவையும் வடிக்கலாம். குற்றம் கலர் கிண்ணத்தின் மீதா? அல்லது புனையும் ஓவியம் மீதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அதரம் நச்சு நீர் ஊற்று! என்றறியாது இன்பவல்லியின் இதழைச் சுவைத்துக் கொண்டே கீழே சாய்ந்த வன் போலாயிற்று திராவிட நாட்டின் கதி, தீயோர் கூட்டுறவால் திராவிடம் தேய்ந்தது. ஆரியனின் அரியணை ஆட்சி யில் உள்ளம் உருக்குலைந்துவிட்டது.

தமிழ்ப்புலவர்களே! ஒருவார்த்தை தாராளமாக இலக்கியங்களை ஆராய்ச்சி செய்யுங்கள். ஆனல் ஆராய்ச்சியிலே யே மூழ்கிவிடாதீர்கள். அடிக்கடி வெ ளியே வந்து ஆராய்ச்சியில் கண்டறிந்த அறிவுக்கருவூலங்களைக் கூறி சமுதாய வாழ்வை வளமாக்குங்கள்.

கோளங்களை ஆராயும் மேனுட் டார்கள் கொசுவைப்பற்றியும் ஆராய் கிருர்கள் வானத்தை வட்ட மிட்டுப் பார்த்துவிட்டு ஆழ் கடலில் மூழ்கியும் விஞ்ஞானத்தின் வளர்ச்சியில் வேட்கை மிகுந்திருக்கிருர்கள் ஆனல் நாமோ உண்டவன் வீட்டையே உருக்குலைக்க சதித்திட்டம் தீட்டுகிறேம்.

கபடன், வஞ்சகன், பொய்யன், சூதாடி, விபச்சாரி, திருடன், கொலைக் காரன், இவர்களெல்லாம் யார் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுக்கிறீர்கள்? வாழ்க்கையில் வழுக்கி விழுந்தோர்கள். பாதையை சமுதாயம் சீராக அமைத்திருந்தால் இந்தப்பட்டி யல் ஏற்பட்டிருக்குமா?

விதி, விதி, என்று பேசி மக்க ளின் மதியை மாய்க்கும் ஏடுகளெல்ல நமக்குத் தேவை தமிழ் பேசும் சமுதா யத்தைத்தட்டியெழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை, தன்னம்பிக்கை ஊட்டும் ஏடுகள் தேவை, மதியைப் பெருக்கி விதியைத் தொலைக்கும் விளக்க ஏடுகள் தேவை.

உரத்தகுரலோன் காட்டிய வழி நடந்தோம் அரசியலில் கபடன் காட் டிய வழியில் நடந்தோம் சமுகத்துறை யில் பூசாரி காட்டிய வழி நடந்தோம் அருள்பெறும் நெறியில்! எத்தன் காட் டிய வழி நடந்தோம் பொருளாதாரத் துறையில், முடிவு? வாழ வழியற்று வஞ்சிக்கப்பட்டதுதான்.

உண்மை, அறிவு, ஆராய்ச்சிகள் உடையோரை நம்மவர்கள் புறக்கணிக் கத்தலைப்பட்டார்கள் பொய்யர்களுக்கும் புளுகுணிகளுக்கும் காலாட் சேயபம் செய்யத்தலைபட்டதால் தான் நாளெல் லாம் நலிந்தோராய் கத்திக் கிடக்கி ரோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடின்றி நாடு ஏதும் சொந் தமின்றி கால் நடையாக இங்கு வந்து திராவிடரின் காலடியிற் கிடந்தோர்கள் இன்று தங்கள் காலடியில் திராவிடரைக் கடத்திக் கொண்டு பூதேவர்களாய் உலவுகின்றனர் உலவலாமா?

மாலைக்கு முதற் பொருள் மண முள்ள மலர். அது போல பேச்சுக்கு முதற் பொருள் சொற் சுவையும் கருத் தாழமும் நிறைந்த செஞ் சொற் கருத் தோவியங்கள்

வந்தோரை வாழவைக்கும் வளத் திரு நாடே இருந்தோரைத் தாழவைக் கலாமா?

நாமிருக்கும் திராவிடம்நமதென் பதறிந்தோம். இது நமக்கே உரிமை யாம், என்பதும் அறிந்தோம். இதனை இந்தியாவுடன் இணைத்திடும் சூதினை வெறுத்தோம், திராவிட அரியணையைப் பெற உயிரையும் தருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாடு இன்னொரு நாட்டை அடக்கி வைக்க முடியாது. அடக்கினால் எரிமலை கக்கும் மக்கள் மனமெனும் கடல் பொங்கி வழியும் புரட்சிப் புயல் வீசும். அந்த புயலின் முன்பு எந்த கொடியவனாலும் நிற்கமுடியாது.

எவன் பொதுமக்களின் கைதட்டுதலை பெறுவதற்காக தன் கொள்கைகளை மாற்றிக் கொள்ளாமல் இருக்கிறானோ அவனே சிறந்த மனிதன். ஒப்புயர்வற்ற இலட்சியவாதி.

எந்தவிதமான சடங்கு செய்தால் சூரிய தோசம் நீங்கும்? — இது நம்முடைய ஆராய்ச்சி சூரியன் பூமியை விட எத்தனை மடங்கு பெரியது? இது மேனாட்டாரின் ஆராய்ச்சி இந்நிலையில் அவன் வளத்துடன் வாழ்கிறான். நாம் வாழ்விழந்து வதைகிறோம். எனின் இயற்கையின் இனப்பாகுபாடா?

இப்போ தெல்லாம் பால்கடலிலிருந்து தேவர்கள் அமுதத்தை எப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைந்தெடுத்தனர் என்பதைக் காண விரும்பவில்லை. தொழிலாளியின் இரத்தத்திலிருந்து முதலாளி எப்படி இரத்தினம் உண்டாக்குகிறன், என்பது போன்ற உண்மைகளை காண விரும்புகின்றனர்.

இந்த உலகத்திற்கும் இல்லாத அந்த உலகத்திற்கு மிடையே பாதையை அமைப்பதி நம் முன்னோர்கள் முனைந்திருந்தார்களே தவிர உழைப்பிற்கும் வாழ்வுக்குமிடையே பாதை அமைக்கவில்லை. எனவே தான் இன்றளவும் இடரும் இருளும் நிரம்பியதாக உள்ளது மக்கள் வாழ்கை.

மாலைக்கு மலர் தேவை, மலருக்கு தோட்டவளம் தேவை, இது போன்றே ஆரணங்குக்குள்ள புன்னகையை ரசிக்க கட்டழகனுக்கு காதல் உணர்வு தேவை.

மக்களின் ஒழுக்கம் தான் ஓர் அரசின் அச்சாணி போன்றது. ஒழுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் நிறைந்த மக்களை சமதர்ம அரசால் மட்டுமே உருவாக்க முடியும்.

இந் நாட்களில் மேடைப் பேச்சு நாடாளும் நம் பணியிலே முக்கியமான கருவியாகிவிட்டது. இந்தக் கருவி ஒரு சிலருக்கு மட்டுமே உரியதல்ல, அப்படி இருத்தலும் தகாது.

அதோ பிரசங்கபூசணம் பேசுகிறார் காண்பதெல்லாம் மாயை, பூண்பதெல்லாம் மாயை யேகாண்! என்பது சரியே! எனினும் அவர் கைவிரலைக் கவனியுங்கள், பிளுஜாகர் வைரம்; பக்கத்திலே வெள்ளிச் செம்பு, இத்தகைய பித்தலாட்டக்காரர்களை சமுதாயம் ஒதுக்கிடவேண்டும்.

நாயிலும் கேடாய் திராவிட நாட்டார் நலிவதை நான் கண்டே ஓயுதல்இன்றி அவர்கள் நலம் எண்ணி உழைத்திட நான் தவறேன்! திராவிடரின் மேண்மையை இகழ்ந்தவனை விடேன்! என்னைநத்து வாயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் விடேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி பேதம் வெறும் மன உணர்ச்சியினால் மட்டுமே ஏற்படுவதல்ல இனிய உணர்ச்சியாலும் ஏற்படுகிறது. பேதம் இலாபம் தருகிறது. எனவே தான் அதனைவிட்டுவிட மனமில்லை. பேதத்தால் பிழைப்பவர்களுக்கு.

ஒரு மனிதன் எந்த வகுப்பை சேர்ந்த வராகவிருந்தாலும் கோவிலுக்குள் வரக்கூடாதென தடுக்கப் படும் வரை அந்தக் கோவிலுக்குள்ளிருக்கும் கடவுள் சிலையும் சக்தி யற்றது தான்.

பொன்னும் மணியும் கொளுத்த காலம் வீரமும் தியாகமும் உலவிய நேரம்! வாழ்க்கையே ஒரு விருந்தாக இருந்த வேளை அந்தக்காலத்தில் திராவிடம் தனி. அந்தத்தனி திராவிடத்தை நான் மீண்டும் உருவாக்கப் பாடு படுகிறோம். பாடுபடுவதா குற்றம்.

இதுவரை விஞ்ஞானத்தினில் விருந்தை நாம் சுவைத்தவர்களே தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமைத்தவர்களில்லை. விருந்தை வெளி நாட்டார் படைத்து அழைத்தால் போய் அருந்திவிட்டு பிறகு குறையும் கூறி இருக்கிறோமே தவிர நாமாக எதையும் கண்டுபிடிக்கவில்லை.

காலத்திற்காகத்தான் கருத்துக்கள், கருத்துகளுக்காக காலம் அல்ல, ஆகவே காலத்திற்கேற்ப கருத்துகளை மாற்ற வேண்டும், காலத்திற் கொவ்வாத கருத்துகளை ஒதுக்கித் தள்ள வேண்டும்.

பரங்கிக்கும், பனியாவுக்குமிடையே நடைபெற்ற போர் முடிந்து விட்டது. பனியாவுக்கு பீடமும் கிடைத்து விட்டது. ஆனால் பீட மெனும் பனியாவின் பிடியில் சிக்கிவுள்ளது திராவிடம், அந்தத் திராவிடத்தின் விடுதலைக்காக போரிடுவதே நம்கடமை.

திருக்கோயிலை வலம் வராத கால் என்ன காலோ? என்று பஜனைகள் நடக்கின்றன, அதேநேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கோவிலின் உள்ளே நுழையாதே? என்று எட்டுக் கோடி ஆதித்திராவிடனை தடுக்கும் காரியமும் நடக்கிறது நடக்கலாமா?

தமிழரின் இன்றைய நிலைமை தாழ்வுடையதுதான். இடர் மிகுந்தது தான் ஆனால் தங்கள் இனத்தைக் கெடுக்கும் ஆரியக் கொள்கைகளை அவர்கள் நீக்கிவிட்டால் அதன்பிறகு அவர்கள் விழித் தெழுந்த வேங்கையாகி விடுவர், நினைவிருக்கட்டும்.

கதம்பம், மலர் குறைவாகவும் தழை அதிகமாகவும் இருப்பின் மாதர் கொள்ளார், அது போலவே பேச்சும், கருத்துக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகி இருப்பின் எவரும் கொள்ளார்

ஓநாய்க்கு இரத்தபானத்தில் சுவை இருக்குமட்டும் ஜீவகாருண்யத்தை அது எப்படி வரவேற்க முடியும். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல வேதங்களுக்கு இலாபம் தரும் சாதனமாக இருக்கும் ஜாதியை ஒழிக்க எப்படி முன் வருவர் அந்த இலாபத்தை உடையவர்கள்.

நான்கு கோடிப் பேர் எங்கேயாவது நயவஞ்சகரின் நாட்டியப் பொம்மைகளாக உள்ளனரா? இல்லை, திராவிடருக்கு மட்டுமே இக்கதி! இந்த இனம் இக்கதி பெற்றதன் காரணம் பூகோளப் பித்தலாட்ட மின்றி வேறென்ன?

உலகத்திலுள்ள எல்லாத் துன்பங்களுக்கும் உலுத்தோர் கையில் உருளும் பணம் தான். சிறுகுட்டையில் தேங்கிய நீரைப் போலத்தான் இருக்கிறது. குடிப்பதற்கு இந்த நீர் உபயோகமில்லை, வயலுக்கும் உபயோக மில்லை ஊர்ந்து செல்லும் விஷக்கிருமிகளின் முட்டைகள் மட்டுமே இதில் நன்றாக வளருகிறது.

நெஞ்சில் உரமும் நேர்மைத்திறமும் கொண்டபருவம் அச்சம் தயை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாட்சண்யம், அற்ற பருவம் ஊக்கமும் உற்சாகமும் உணர்ச்சியும் நிறைந்து செயற்படும் கருத்துள்ள பருவம் மாணவப்பருவம்.

பகுத்தறிவை பயன் படுத்துபதில்லை. என்று முடிவு செய்து விட்டபிறகு மனிதனிடம் வாதிடுவது செத்துப்போன மனிதனுக்கு மருந்தூட்டுவதற்கு நிகராகும்.

அலுத்துப் போய் சற்று நேரம் இசை கேட்கலாம் என்று வானொலியைத்திருப்பினுல் என்ன கேட்கிறேம்? ஏன் பள்ளி கொண்டீர் ஸ்ரீ ரங்கநாதரே! என்றபாட்டு சந்தேகம் இசைக்குக் கூடவந்துவிட்டது. இன்னும் ஐயப்பாட்டிலேயே வாழ்கிறேம்.

சரஸ்வதி தாண்டவமாடுகிருள். அவன் நாவில் என்று புகழ்வதும் தம்பி என்னடா சண்டப்பிரசண்டமடிக்கிருய், என்று ஏசுவதும் ஏக காலத்தில் நடைபெறும் விஞேதபுரி மேடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நமது எல்லையை இழந்து விட்டோம் ஆனல் மறந்துவிடவில்லை, நமது பழம் வீரம் மங்கி வருகிறது. ஆனல் மறைந்துவிடவில்லை. எனவே தான் வீர முரசு கொட்டுகிறேம்,

அர்த்த மற்ற சம்பிரதாயங்கள் பகுத்தறிவுக் கொவ்வாத காண்டுமிராண்டித்தனங்களால் மனிதன் அடிமைபடுத்தப்பட்டிருக்கிறன். இந்த அடிமை விலங் கொடிக்க, வன் செயல்களை மடியவைக்க பகுத்தறிவு தலை தூக்க வேண்டும்.

உண்மைக்காதலின் இன்பத்தை சுவைத்தறியாத ஆடவரும் பெண்டிருமே காமச் சேற்றிலே புரள்கிறர்கள். அந்தச் சேற்றில் விளையும் முட்புதரே விபச்சாரம்.

இன்று தாசர்களாக வுள்ள தமிழர்கள் ஒரு காலத்தில் தரணியாண்டவர்கள் தரணியாண்ட காலத்தில் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானத்தை தன்னடக்கமாக்கிக் கொண்டவர்களிடம் சாதிப்பித்து, வைதீக நெறி, அடக்கியாளும் ஆணவம் அறவே இருந்திருக்கவில்லை

மணி மேலே மாசு! மடுமேலே பாசி! வயலினடயேகளே! தமிழர் அவர்களுக்குள் தகாதாரின் கூட்டுறவு.

தோழமை சமபல முள்ள இருவருக்குள் தான் இருக்க முடியும், சுரண்டும் சுபாசம், சுரண்டப்படுகின்ற பழக்கத்தோசம் ஆகியன நிரந்தரமாக இருக்குமானுல் தொல்லேயும் துயரமும் துவேசமும் வளருமே ஒழிய தோழமை எங்கிருந்து முளேக்கும்

பழைய இலக்கியங்களில் காவியச் சுவைதரும். பலாம். நடையழகு நனி சொட்டலாம் அவற்றைத் தீட்டியவர்கள் வல்லவர்களாகக் கூட இருக்கலாம் ஆனுல் அதற்காக அவற்றில் காணப்படும் கருத்துக்கள் என்றும் மாற்றமுடியாதவை, என்று கூற முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோலை இருக்கும் வரைத்தான் குயிலும் கூவும் மயிலும் ஆடும் — தளிர் பருவம் மாறிவிட்டால் சோலைக்கே சிறப்பிருக்காது. மயிலும் குயிலும் உலவிடுமா?

தனிமனித வழிபாடு நாட்டில் பெருகிக் கொண்டே செல்கிறது, பழைய கடவுள்கள் தூக்கி எறியப் பட்டு புதுக் கடவுள்கள் முளைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடவுளின் பெயரால் அற்புதங்களை செய்து காட்டி மதத்திற்கு திருப்பும் வைதிகர்களிடம் இதையும் கேளுங்கள் பிழைப்புக்காக மாயா ஜாலம் செய்யும் வித்தைக்காரனின் 'பிழைப்பு' எனும் கடவுள் நாகரீகமான தொன்றா?

சோம்பேறியிடம் நாம் எதை எதிர்பார்க்கலாம், 'தலைவிதி' என்னும் தோல்வியின் அமுத்தமான ஆணித்தரமான அசிங்கமான அருட்சிறப்புகளைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் உள்ளத்தில் மட்டுமல்ல உட லெங்கும் வியாபித்து விட்ட தொற்று நோயாகும்.

நம்மை சுற்றியுள்ள உயிர் பிராணிகளில் பலவீனத்தால் செத்துச் செத்துப் பிழைக்கும் ஜீவஆத்மாக்களின் தோற்றத்தைக் கண்டு இரக்கசிந்தைக்கு ஆளாகி இன்புறும் இயல்பு பெரும்பாலாரிடம் பரவிக் கொண்டே வருகிறது.

சூலூரிலிருந்து பாலூர் சென்று வேலையூர் சென்று, சேலையூர் சென்று சுடலையூர் சென்று மனிதன் முடிசம் அடைகிறுன். அவனை விட்டு ஆன்மா எப்படி பிரிந்து சென்றுவிட்டது என்பதை கற்பனை செய்து பார்த்தோமோ? மாருக கம்பலைக் கண்ணீர் வடிக்கிறும் இது நியாயமா?

வேதாந்த விசாரத்தில் மூழ்கிறுமே தவிர வேதாந்த விசாரத்தை தொட்டுத்தழுவும் மூளையின் பலத்தையும், பலவீனத்தையும் இறைமைப் படுத்திக் பார்க்கிறுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் பெயரால் நடத்தப் படும் வன் முறைகள் தான் நாட்டில் பெருக்கம் — கடவுளே கொடுமைகளின் ஒருமைப் பாட்டுக்கு உடந்தையாக விருந்தால் உலக ஒருமைப்பாடு, மக்கள் ஒருமைப்பாடு எங்ஙனம் நியாயத்தோ டிருக்கும்.

மதத்தின் பெயரால் சமுதாயம் சிறப்போங்கி வாழத்தலைப்பட்டதே இல்லை மாறாக மதத்தின் பெயரால் குருட்டு நம்பிக்கையே தலைதூக்குகிறது

கற்பனைக் கருத்தோட்டம் தான் இராமாயணம் சுவைதரவல்லது. வர வேற்கிறேன், ஆனால் உண்மைக்குப் புறம்பான திராவிடரை இழிவுபடுத்தித் தான் காப்பியம் படைக்க வேண் டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்குமொழி குறித்து நம்மீது சாணத்தை அள்ளித் தெளித்தோர் ஓராயிரப்—வக்கரிப்பாளர்களின் வாய்த்துடுக்கு நொடிப்பொழுதில் ஓடி ஒளித்ததை நாடறியும்.

துடுக்குத்தனமாக அடுக்குமொழி பேசுவோரை மடக்குவதற்கு வெடுக்கு மொழி பேசி முடுக்கும் பண்பை நாம் கையாண்டதில்லை.

இருளைக் கீறிகொண்டு செல்லும் போதுதான் மின் மினியே அழகொளி தருகிறது மின்மினி ஒளிதருவது கண்டு அதனைக் கண்ணுடிப்பேழைக்குள் அடுக்கி வைத்து அழகு பார்க்கத்தேவையா?

நடை தேடுவது நல்லதா? அளவும் முறையும் தேவையும் அறிந்து பயன்படுத்திஞல் எழிலும், சுவையும் நிரம்பக்கிடைக்கும் தவறிஞல் எரிச்சல் கிளம்பும் ஏளனம் வெடிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக மக்கள் தனிச்சிறப்பளித்துக் கொண்டாடி மகிழ்வுறும் நாளேதோ? எங்கிருந்தோ ஒருபுத்தெழில் இங்கு அரசோச்ச வந்திடும் விந்தை சிந்தைக்கு இனிப்பளிக்கக் காண்கிறோம் இன்னல் மிகுந்த வாழ்வில் பின்னிப்பிணைந்து கிடக்கும் நிலையிலுள்ள மக்களையும் இன்னொரு நாள் கன்னல் கண்டு பேசிட செந்நெல் குவிந்திருக்க செவ்வாழை அருகிலிருக்க உழைப்பின் பயனாக உருவான பண்டமெல்லாம் நிறைந்திருக்க மாடு கன்றுகளும்—மிகையான மேனி மிடுக்குடனும் தந்திடுவது நாங்கள் தந்திட்ட பாலன்றோ? இஞ்சியும், மஞ்சளும் இயற்கைதந்த அணிகலன் என்பதனை உய்த்துணரும் நன்னாள் என்றெண்ணி மகிழ்வுதனைப் பெற்று திகழ்தல் மக்கள் சால்பு.

நிறை வாழ்வு கனிச்சுவை போன்றுளது அதனை நித்தம் பற்றிடும் வாய்ப்புக்கிடைக்கப் பெறுதோரும் இன்னொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் எழில் மாளிகைதனை எட்டிப் பார்த்துக்களிப்படையும் இல்லாதவன் போல் மிகையூட்டிக்காணும் நகைப்புகளையும் பொலிவகன்ற எழில் கண்டு பெருமையுறும் பாங்கன்றோ?

நாட்டின் பெருவளங்கள் நிலமகளின் சூல் முதிர்ந்த பூங்கெழில், இவ்வெழில், யாவும் நித்திலவெண்முத்துக்கள் இந்த எழிலினை பயன் தருவனவாக பாங்குடன் பற்றிடவும் சுவையினை நுகர்ந்திடவும்! "உழைப்பு" என்னும் ஆற்றலினைப் பெற்றிடல் வேண்டும்.

செந்தமிழர் செம்மை பெற அறிவாற்றல் என்னும் சூல்முதிரும் நல்முத்துக்கள் உருவாகிடவேண்டும். இவ்வாற்றல் கூட்டு முயற்சியினுல் மிகுந்த சிறப்பெய்தும் இருள் நீங்கி ஒளிகாண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் ஒலியல்ல, தையலரின் சிலம்பு இசைக்கும் ஒலி தன்னோடு போட்டியிட்டு கட்டழகி பெற்றடுத்த இன்ப வடிவத்தை எடுத்தணைத்து முத்த மிடும் இளைஞன் எழுப்பிவிடும் இச்சொலிச்கும் போட்டி எழக்கண்டு கருத்தறிந்து பண்டு நடந்ததனை எண்ணி, எண்ணிய பாட்டன் சிரித்திட இடையே விக்கல், இருமல் கிளப்பிவிடும் ஒலியும் இன்னொரென்ன ஒலியே இசையாகி விடக்காண்கிறோம்.

வார்த்தைகளில் கருத்தாழம் தங்கு தடையின்றி தானாக மலர வேண்டும், மணமுள்ள மலர்களை பதமாகப் பறித்துப்பக்குவமாக மாலை தொடுக்க வேண்டியது எப்படியோ அந்த நிகண்டிலேயே கருத்தோட்டம் அமைய வேண்டும்.

ஓசை நயத்தில் இயல்பாகவே அமைந்து பொருள் செறிந்து பொலிவு தருபவையே தேவை பொருளும், பொலிவும் வலிந்தகன்றுகொண்டு வருவன மொழிக்கு நாமே நம்மையும் அறியாமல் செய்து விடும் தீங்காகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் கனவுக்கண்காட்சியை நினைவுகளாக்கி களித்திருக்கும்போது மற்றும் சிலர் தங்கள் ஆசைகளை செய்திகளாக்குகிறார்கள், இன்னும் சிலர் தீர்ப்புகளைச் செய்துகொண்டு ஆதாரங்களுக்காக அலைகிறார்கள்.

நம்மை பிரிவினைவாதிகள் என்கிறார்கள். இனவாதிகள் என்று இழித்துப் பேசுகிறார்கள் இன—மொழி விடுதலை வேட்கைக்காக உயிரை அர்ப்பணித்த அருந்தகைகள் கணக்கிலடங்கா இவர்களெல்லாம் சரித்திரச்சான்றுகளின் எச்சங்களாகும்.

அசுத்த இரத்தத்திலிருந்து விஷக்கிருமிகள் வீறு கொண்டெழுவதுபோல் மிதவாதத்திலிருந்து தீவிரவாதம் என்னும் எழுச்சிவாதம் பிறக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கங்களில் தேசியவாத உணர்ச்சி அழுத்தம் வெகுசனக்கண்ணோட்டத்தில் உருவாகும் விரிசல்தான் காரணம்.

மிதவாத, தீவிரவாத, சிந்தாந்தக் கோட்பாடுகள் அடிமட்டத்திலிருந்து— மேல்மட்டம்வரை எல்லா மட்டத்திலும் பிளவு, இந்த கீழ்மட்டத்திலுள்ளோர் திரிபு வாதிகள் என்றும், மேல்மட்டத்திலுள்ளோர் "வக்கரிப்பாளர்கள்" என்றும் தங்களைத் தாங்களே இனம் கண்டு ஒழுக்காறு பேசும் பாங்கினை வளர்ப்பது எப்படி ஆகும்?

தீவிரவாதம் பிஞ்சிலும் பழுக்கலாம், முதிர்ச்சியிலும் பழுக்கலாம் சிந்தனைக்கட்டுக்கோப்பையோ—தத்துவ விளக்கத்தையோ உன்னி உருகிப்பார்க்கும் எழிலோட்டம் மின்னிடுவதில்லை.

ஒரு இயக்கத்தின் ஸ்தாபன அமைப்புச்சுவரைகுள்ளநரிகளால் துவாரமிடத்தான் முடியுமேதவிர சரித்துச் சாய்க்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியவாதம் முரண்பாட்டுக் குழப்பம் நிறைந்த சிறு குட்டை போன்றது. உலகம் இரு பெரும் பிரிவாகி யுத்தத்தில் இறங்கி இருக்கும் போது இந்தியர்களும் நமது எதிரிகளின் எதிர் அணியில் இணைந்து நின்று இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வெள்ளையனை வெளியேற்ற வேண்டும், என்று மிகப் பெரிய மாற்றுத்திட்டத்தை அண்ணல் காந்தியே மருண்ட திட்டத்தை முன் வைத்தவர் சந்திர போசு சிங்கப்பூர் மலாயா போன்ற நாடுகளுக்குச் சென்று படைதிரட்டிப்போரிட்ட வீர வரலாற்றை பின்னால் வந்த விலாவெலும் பில்லாக்கோழைகள் குறைத்து மதித்தாலும் வரலாறு நிச்சயம் அந்த ஒளி மிகு அத்தியாயத்தை மறைத்து விடாது.

கொள்கைத்திட்டங்களற்ற இயக்கங்கள் அரசியல் லாபத்துக்காக மக்களை காட்சிப் பொருட்களாக்கி அரசியல் சந்தையில் விற்றுப்பிழைத்த வண்ணம் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய வாதத்திலிருந்து தான் பயங்கர வாதம் முளைக்கும் அதேநேரத்தில் தீவிரவாதமும், சோசலிச வாதமும் சனநாயக வாதமும் இதிலிருந்து தான் வேர்விடும், என்னும் உண்மையையும் நாம் கண்டறிய வேண்டும்.

ஒரு மிதவாத இயக்கத்திலிருந்து சிதறிய எழுச்சி வடிவங்கள் குட்டிகட்சிகளாக வடிவம் பெற்ற இத்தகைய சிந்தனை அழுத்தத்தில் குழப்பங்களையும் கலவரங்களையும் உலவ விட்டிருப்பது சனநாயக நாட்டில் மட்டும் தான் இருக்கமுடியும்.

இந்திய பொதுவுடமைக்கட்சியில் பிளவேற்பட்டு கட்சி இரண்டாகப் பிழந்தது. அதுவே பின்னர் மூன்ருகி நாலாகச்சிதறுண்டது. இப்பிழவிற்குக் காரணம் சித்தாந்தக் குழப்பங்களே யன்றி வேறு எதுவாய் இருக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசிங்கமான அங்கலாய்ப்புகளால், விரக்தி நிறைந்த ஏளனங்களால் தனி மனிதப்போராட்டமோ அதிகாரப்போராட்டமோ, கொள்கைப் போராட்டமோ, நிலைத்து நிற்பதில்லை

நாட்டின் விடுதலைப்போரில் தீரத்துடனும் வீரத்துடனும் போரிட்டவர்களின் குருதி தோய்ந்த கபால மண்டையோடுகள் போர்கள செவ்விரத்தச் சேற்றில் புதையுண்டு விட்டன. மிஞ்சிக்கிடந்தோரும் எலும்பைத்தேடி எடுக்க முடியாத அளவு நிலமாள் உறிஞ்சிக்குடித்து விட்டாள் ''சந்தர்ப்பவாதிகள்'' போராட்டத்தியாகிகளின் போர்வைக்குள்ளிருந்து வந்திருப்பதாகக் கூறி ஆட்சிக்கு வரமுட்டி மோதுகிறார்கள்.

மக்கள் சக்தியை மட்டும் மூலதனமாகக்கொண்ட இயக்கங்கள் மட்டுமே இன்று உருக்குலையாமல், துருப்பிடிக்காமல், தேய்ந்துவிடாமல், மாய்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாமல், அசைக்க பொண்ணுத கோட்டை கொத்தளமாக புத்தொளி வீசுகிறது.

குறைந்த சிராய்ப்புடன் குறுமதியாளர்கள் உருவாகலாம்—ஏன் நாருடன் சேர்ந்த கதம்பத்துக்கு மட்டும் புகழாரம் நாருக்கு புறக்கணிப்பு—கதம்ப அணியை தொகுத்து பூமாலையாக பெயர் நாமம் சூட்டித்தருவதில் அதன் பங்களிப்பு.

பிரமாண்டமான தியாகங்களால் மட்டுமல்ல சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை மையமாகக்கொண்டு உருவாகப்பட்ட இயக்கங்களில் பிளவிருக்காது, முரண்பாடிருக்காது, வெடிப்பிருக்காது, கீறல் இருக்காது, விரிசல் இருக்காது.

வெளியே யுள்ளவர்கள் போடும் ஆர்ப்பரிப்பும், கிளர்ச்சியும் மக்கள் கோபுரத்தின் ஒரு கல்லைத்தானும் பெயர்த்தெடுக்க முடியாது. இதைகட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக்கோப்பான அமைப்பிற்கு, கட்ட விழ்ந்த நெல்லிக்காய் மூடை சவாலிடு வதைப் போலாகின்றது.

அற்ப ஆசை என்பது ஆந்தையின் கண்ணுக்கோ, பூனையின் கண்ணுக்கோ ஒப்பாக விருப்பதில்லை. கண்களை மறைத்து கருத்தை இருட்டாக்கும் கய மைத்தனமே அற்ப ஆசையின் பெட் டகம்!

பிரஞ்சுப்புரட்சி தோற்றதையும், ருஸ்யப்புரட்சி வெற்றி வாகை சூடிய தையும், மையமாகக்கொண்டு ஆராயும் போது, பல உண்மைகள் உந்தப்படுகின் றன—எந்த நோக்கத்திற்காக பிரஞ்சுப்பு ரட்சி தோன்றியதோ அதில் அது வெற்றி பெறவில்லை. "லூயிக்கனின் சர் வாதிகாரத்துக்குச் சாவுமணி! ஆனல் புரட்சியின் முடிவு லூயிக்கனைவிட கோ டிய சர்வாதிகாரியான நெப்போலியன் பரிணமவளர்ச்சி பெற்று விடுகிருனே— இதன் தத்துவார்த்தம் என்ன? ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்கடிக்கப்படுகிறது. மற்ருென்று வெற்றி வாகை சூடுகிறது—என்று வெறுமனே வரலாற்றைப் படித்துவிட்டு தலையாட்டுவதை விட்டு விட்டு சிந்தனைப் போக்கில் திருப்பத்தை அலசி ஆராய இதய சுத்தி இருக்கவேண்டும். இந்த இதய சுத்தி இருந்தால் பின்வரும் உண்மைகளைக்கண்டறியலாம். பிரஞ்சுப் புரட்சி கட்டுக்கோப்பான அமைப்பால் நடத்தப்படவில்லை, கட்டுப்பாடான தலைமையின் கீழ் நடத்தப்படவில்லை, எதிரிகளால் உணர்ச்சி வசப்பட்டு நடத்தப்பட்டது எனவே அது தோற்றது, ஆனால் ருஸ்யப்புரட்சி பயிற்றப்பட்ட பட்டாளத்துச்சிப்பாய்களால் நடத்தப்பட்டது. கட்டுக்கோப்பான அமைப்பின்கீழ் — தலைமையின்கீழ் நடத்தப்பட்டது அதனுல் அது வெற்றி விருதைப்பெற்று வரலாற்றில் அழியா இடம் வகிக்கிறது என்னும் உண்மைகளைக் கண்டறியலாம்.

சலவைக்கல்லினுல் எழுப்பப்பட்ட சிலையைவிட வெண்கலத்தினுல் செய்யப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட சிலே சிறந்ததா? என்றறியும் பேதமையை சிலைகளாக நிற்கும் மனிதக் கடவுள்களை வர்ணபேதத்தில் வகுத்துக் கூறும் மூடக்கொள்கை நமது இனத்திலிருந்து முற்றாக ஒழியவேண்டும் என்பதே என் கருத்தாகும்.

நிர்வாகம் அரசின் வாயிற்கதவு போன்றதாகும். இலஞ்சம் அரசின் கொல்லைப்புற புழக்கடை வழியாகும்—அரசின் வாயிற்கதவாம் நிர்வாக மென்னும் செங்கோலினுல் கொல்லைப்புறமாக நுழைந்திருக்கும் இராட்சத இலஞ்சப் பேயை விரட்ட நெஞ்சுறுதி மட்டுமல்ல உள்ளத்தூய்மையும் இருக்கவேண்டும்.

மன மெனும் மாளிகையின் மந்த மாருதம் எத்தனை ரம்மியமானது! இம்மனமெனும் பெருமாளிகையில் அந்தியின் அழகொளிரும்—காலையின் கவர்ச்சித்தென்றல் வீசும்—நள்ளிரவின் குளிர் மயக்கம் கொப்பளிக்கும்—நண்பகலின்—வெந்தீக்கொதிப்பும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊசியில் நூலைக் கோர்க்கும் போது அவசரப்படாதே! அவதானம் தேவை வீடு பற்றி எரியும் போது அவசரப்படு அத்தோடு மதியும் தேவை.

கொசுவின் இருதயமும் யானையின் இருதயமும் உருவ அமைப்புக்குத் தகுந் தபடிதான் உண்டு. என்கிறன் பகுத்தறி வுவாதி. கொசு என்ன கொசு என்கிறன் குதர்க்கவாதி—முடிவு முற்றுப்பெருத விதண்டாவாதம்.

நீடுயர்ந்த நெடு மரத்தை மேனோக்கிப்பார்க்கிறேம் அம்மரத்தைத் தாங்கி நிற்கும் அடிப்புற வேரை அவதானிப்பதில்லை. அலங்கார அற்புதங்களைக்கண்டு அதிசயிக்கும் அளவிற்கு அடிப்படை உண்மைகளை ஆராய்ந்து தெளிய நமக்குத் தெரிவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுவளம் பற்றி அறநெறி குறித்து, தாழாத் தமிழகம் என்ன கருத்துக்கொண்டிருந்தது, என்பதனைக் கண்டறியும் ஆர்வம் மிகுந்துள்ளது. இந்த ஆர்வத்தையும், ஆவலையும் மீண்டும், மீண்டும் பெற்றிடச்செய்யவேண்டும். இயற்கை செல்வம் இத்தனை பெற்றிருந்தும் இன்பத்தமிழகத்தில் இன்னல் கப்பிக்கொண்டிருக்கக் காரணம் என்ன?

தமிழர்தம் நல் வாழ்வுதனைக் குலைக்கும் நச்சரவு போன்ற நினைப்புகளும், நிலைமைகளும், நிகண்டுகளும், அமைப்புகளும், நீடித்திருக்க விடல் நன்றல்ல—நலம் மாய்க்கும் என்பதறிந்து அறிவுக்கதிரினையே அறுவடை செய்து எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடவே இயற்கை நீதியெனக்கொண்டு பணி புரியும் ஆர்வம் பெற்றிட வேண்டும்.

ஆடிடும் பூங்கொடி, பாடிடும் அருவி, கொஞ்சிடும் கிள்ளை, துள்ளிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிமீன், மருண்டவிழி மான் ஒளி விடுவிண்மீன், சிரித்திடும் முல்லை, பேசிடும் புருக்கள், பழமுதிர்சோலை, வளமிகும்வயல்கள்,—இவையாவும் நம்மைச் சுற்றியிருக்கும் எழிலோவியங்கள்.

முற்றிய கதிர் நிரம்பிய வயலின் ஓரத்தில் சென்றிடும் உழவனுக்கு காற்ருல் அசைந்தாடும் இளம்பயிர்களிப் பூட்டி, உள்ளம் பூரிப்படைவதைப்போல் கன்னித்தமிழின் ஆற்ருெழுக்குமிகை யூட்டி நர்த்தனமாடிஞல் சுவைஞனும் காமுறிக்களிப்படைவான்.

எழிலோவியம் நிரம்பவுளது நம்மைச்சுற்றி! ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வகையான அழகுததும்புகிறது ஆனுல்! அந்த புத்தழகு மட்டும்தான் அதை நமக்களிக்கின்றன. என்ருல் அவை பெருமைக்குரியனவாகா, புத்தழகு காட்டி நம்மை மகிழ்விப்பதுடன் அவை தமது நன்மையின் காரணமாக நமக்கு பயனையும் வழங்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை செல்வம் நமக்களித்த இன்ப ஊற்றுக்கள் எத்தனை? இவற்றில், கனியெல்லாம் சிலருக்கு—காய்ச்சருகு பலருக்கு—ஒளியில் சிலர்—பாழிருளில் பலர்—வாழ்வர் சிலர்—வதைபடுவார் பலர்—எனும் நிலை காணவல்ல இத்தனை கோலம் எண்ணற்றனவற்றை ஈந்து என்றும் இளமையுடன் இயற்கையாள் கொலுவீற்றிருப்பது இயற்கையன்னை தீட்டித் தந்துள்ள கோலம் எண்ணவெண்ண இனிப்பளிப்பதாகவுளது.

நிலக்கள்ளியாய் தமிழர் வாழ்வில் படர்ந்திருக்கும் கோத்திர ஆசாரங்களை நீக்கிட உள்ளத்தை பாசறு பொன்னுக்கி ஒளிவிடு முத்தாக துளிர் விடத்தகுந்தவனவாவும், மிகுந்தனவாகவுமான எழிலார் கருத்தோட்டம் எங்கிருந்தேனும் ஏற்றம் கொடுத்திடல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியுண்டுபார்வையில்லை! வாயுண்டு பேசும் திறனில்லை! வளமுண்டு வாழ்வில்லை, இத்தனை நலிவுகளும் நம் மெச்சுற்றிச்சூழ்ந்து கிடக்கின்றன—இருக்கலாமா?

நாடு முழுவதிலும் இன்றுள்ளதோர் நலிவு நிலை குறித்து காரணம் கண்டறிய கேடுகளைந்திட, நலம் விளைவித்திட உருக்குலைந்துகிடப்போர், ஒருமைப்பட்டு உழைத்திடவேண்டும்.

செந்நெல்லும், காய் கனிவகையும், பூவும், பிஞ்சும், கிழங்கு இனமும் உண்பனவும், உடுப்பனவும், பூசுவனவும் பூண்பனவும், இயற்கையளித்திட்ட இன்ப ஊற்றன்றோ! எத்துணை உழைப்பினை நல்கி நம்மை மகிழ்வூட்ட அதன் ஆக்கச்சக்தி அளப்பெரிதல்லவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிச்சல் வாதம் என்பது ஒரு முனைவாதம், விட்டில் பூச்சியின் துணிச் சலால் தான் அது சாகடிக்கப் படுகிறது.

வெறுமையாக்கப்பட்ட நெஞ்சங் களில் மட்டும் தான் வேதனையின் கசிவு உண்டு இழுக்காறும், அழுக்காறும், அதன் இரட்டைக் குழந்தைகள்.

கரை புரண்டோடும் கட்டாறு ஹிந்தி அரக்கி தீந்தமிழோரைகட்டாற் றுப்பெருசுழியில் சிக்குண்டு மூழ்கடிக்க அரகோச்சும், கோலேந்திகள் வீழ்த்தும் சூழ்ச்சியில் சிக்கிவிடாதீர்கள்.

உயரே ஏறியவன் கீழிறங்கித் தான் ஆகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுச்சிந்தனை எங்கிருந்தும் பிறக்கலாம், சிந்தனையில் உருவாகும் தெளிவில் தான் ஏக்கம் நிறையா இன்ப வாழ்வு நிலைத்திருக்கும்.

ஏக்கம் மேலிட்டு ஏதும் செய்ய இயலா நிலையினராகிவிடின் நாடுகாடாகும் மக்கள் பேடும் மாக்களாவர் எனவேதான் அந்த ஏக்கம் நம்மை செயலாற்றவைத்திடும் வலியாக மாறிடவேண்டும்.

உலகிலே பல்வேறு நாடுகளில் இடர்பட்ட மக்கள் இழிவு நிலையினில் தள்ளப்பட்ட மக்கள் துக்கத்தால் துவண்டு ஏக்கத்தால் நெருக்கப்பட்டு இதயம் வெந்து இடுப்பொடிந்து ஏதும் செய்யவியலாத நிலையினராகி விட்டவர் போக, ஒரு சிலர் துணிந்து எழுந்தனர் எதிர்த்து நின்றவர், வெற்றிகண்டனர், பெருமூச்சிலிருந்து புன்னகை பிறந்தது! சிறைக்கோட்டங்களிலிருந்து மக்களாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றங்கள் உருவாகின, வெட்டுண்ட சிரங்களிலிருந்து கொட்டி செங்குருதித் துளிகள் கொடுமையை வெட்டி வீழ்த்தும் கூர்வாளாயின.

கொடுமைக்கு ஆளான மக்கள் கொடிய கண்ணீர் ஆதிக்கக்கோட்டைகளை தூளாக்கிவிடும் வெடிகுண்டுகளாயின. இது வல்லூறை விரட்டிய சிட்டுக்குருவிகளை ஒத்திருக்கிறது.

கனி பறித்துச்சாறு எடுத்துப்பருகிடுவார் உண்டு, இங்கு, நாமோ, வெம்பிப் பழுக்க வைத்து வேடிக்கை பார்க்கிறோம்.

புத்தறிவின் புரையோட்டம் இன்றுள்ள அறிவுஜீவிகளின் கணையாழி! நம் ஆன்றோர் வடித்துத்தந்திருக்கும் வழுவோசை மரபுகள் சந்தநடை சிந்துமாழவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துவச்செருக்குதான் ஒரு எழுத்தாளனின் ஆற்றலின் வெளிப்பாடு, அவனது புலமையின் சாளரம்!

சமகால இலக்கியதிறனாய்புச்சிந்தனைகள் வாழ்வின் அடிப்படைத்தூண்டுதல்களை மையமாகக்கொண்டுள்ளன.

இலக்கியத்தின் இங்கிதம், இலக்கணம், இலக்கண வழுக்கள், வடுக்கள், கடுகளவேனும் கலக்க நேரிடின் அது இலக்கியத்தரத்தைவிட்டு நழுவிவிடும்.

நாம் இழந்துவிட்ட பாரம்பரிய சொத்துரிமைகளைக் கேட்கவில்லை. மண்டியிட்டுக்கெஞ்சவில்லை. எங்கள் எழிலார்ந்த செந்தமிழை எங்களிடமிருந்து பிரித்து கொடுமைக்காளாக்காதே! என்றுநான் அதிகாரவர்க்கத்தைக் கேட்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி வெறிவக்கரிப்பாளர்களே! கூச்சலிடாதீர்கள் — எங்கள் நிலையில் நீங்கள் இருந்தால் கோச மிடுவீர்களா? கும்பி எரிந்து கிடப்பீர்களா? என்று சிந்தியுங்கள்.

ஆற்றெழுக்கு நடையில் சொற்செறிவும் பொருட் செறிவும் பொதிந்து கிடக்கும் தீந்தமிழை பிற மொழீ கலக்கி நாசப்படுத்தும் கனவான்களே விலகிப்போங்கள்.

உள்ள உயிர் ஒன்றுதான் அது ஒரு முறைதான்—பிரியப்போவதும் உறுதிதான் வறுமைத் தேள் கொட்டியோ—பூகம்பம், வெள்ளம், தொற்றுநோய் என்பன போன்ற தாக்கங்களாலோ போயிடும் இவ்உயிர் எங்கள் தாய்த்திரு நாட்டை மீட்கப்போர் தொடுத்து மாளுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூம்பொழில் புனராடி தன்னழகை வாரிவீசுகிறது. எழிலார்ந்த அழகோவியம் அந்த ஒளிப்பிம்பத்தில் உறவாடி எழிற்கோலம் காட்டட்டும்.

உருட்டும் கண் மிரட்டும் சொல் எப்போதும் ஆதிக்கக்கருவிகள்!

சடங்கு, சம்பிரதாயம், குலம் கோத்திரம், என்பன போன்ற பிரம கோட்பாடுகளை இந்த மனிதன் உருவாக்கிவிட்டு "அங்குவிதிக்கப்பட்டது" என்று இடம் ஏவல் தெரியாமல் தப்பித்துவிடுகிறான்.

காவி உடையைக்கண்டு மயங்காதீர்கள் கள்ளனும் காமுகனும் கூடத்தான் காவியுடையனிந்து சமுதாயத்தை வஞ்சிக்கிறான். சிலராக இருக்கிறாரா? எனக் கண்டறிய செயலைக்கவனியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சில் கனிகளாக்கப்பட்ட எழிலரிசிகள் மறுவாழ்வுக்கு விலக்களிக்கப்பட்டவர்கள், என்னும் சமுதாயக்கட்டுப்பாடு இருக்கும் வரை விபச்சாரத்தை வெறும் சட்டங்களால் போக்கடிக்க முடியாது.

ஜாதகக்கணக்குப்படி பிறந்த குழந்தை மூளியாக்கப்பட்டோ, முண்டமாக்கப்பட்டோ, முடமாக்கப்ட்டோ இருந்தால் அந்த ஜாதக கணக்கு பிழையே தவிர வேறென்ன இருக்க முடியும்.

தடியடித் தழும்புகள் — நாங்கள் பெறற்கரிய பொற்பதக்கம் — பூச்செண்டு.

கண்ணீர் புகை—அது எங்களுக்கு பன்னீர்த்துளி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகியின் வாழ்வும் வீணனின் வாழ்வும் ஒன்றாகத்தான் இருக்கமுடியும் விவேகி வாழ்வுச்சக்கரத்தின் வீணையை மீட்டுகிறான் வீணன் மீட்டும் வீணையின் நுகத்தடியில் சிக்கி இதிகாச கதாபாத்திரமாகிறான்.

தோல்வியின் திருப்பம் வெற்றியெனில் வெற்றியின் திருப்பமும் தோல்வியாகத்தானே இருக்கமுடியும்.

அதிகாரம் ஒரு மீட்டல் அதற்கு அடங்கி இருப்பது கூட்டல் அதற்கு அத்துமீறிப்போதல் கழித்தல்.

சிறுமைப்படுத்தப்பட்டவர்களின் உணர்ச்சிக்கொந்தளிப்பில் உருவானதே பாகிஸ்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் ஆயிரம் இருக்க அடியார்கள் பாடி வைத்து விட்டுப்போன பதிகங்கள் பல இருக்க அதிர் வேட்டும், ஆகாசவாணமும் ஆர்ப்பரித்த வண்ண மிருக்க தங்கப்பாதக்குறடு குருமார்கள் முதற்கொண்டு தணலைப் புனலாக்கும் அற்புதம் புரிபவர் என்று விளம்பரப்ப டுத்திக்கொள்ளும் கோவணாண்டிகள் வரை கொலுவீற்றிருக்க நாத்திகக்கருத்துக்கள் மக்களிடம் பரவிக்கொண்டிருக்றது. இது சிந்திக்கப்பட் தன் விளைவு தானே!

சிருஸ்டித்தன்மையில் தான் எத்தனை கோளாறுகள், சிருஸ்டிகர்த்தா வேறுபாடற்று சீராகப்படைத்திருந்தால் உலகம் உருண்டையாக இருக்கமுடியாது தட்டையாக தான் இருக்கமுடியும்.

மயிலாசன மகுடந்தாங்கிகளே! உங்களின்தலையோடுகளும் கபால ஓடுகளாய் உருமாறும் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசோச்சும் மரபினர் இத்தரணி யைத்திக்காடாக்கிவிட்ட வரலாற்று சான்றுகள்தான் மிகுதம்.

நடைபாதையிலும் மனித உணர்வுகள் சிலிர்த்து நிற்பதால்தான் நடைப் பிணப் பெயர் பெற்றது.

கொத்தடிமை வாழ்வு சாதியின் பெயரால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு விசவி ருட்சம்!

அங்கலாய்ப்புகள் முழுமை பெ றும் போது உருவாகும் பொருளே எழுச்சி யெனப்படும்.

சித்தாந்தத்திலிருந்து வேதாந்தம் பிறக்கிறது. வேதாந்தத்திலிருந்து வைத் தியம் பிறக்கிறது — இதிலிருந்து பிறப்ப தற்கு எது பெயரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசி, பட்டினி, வறுமை, இழிவு பழி, புறக்கணிப்பு, கொடுமை, மரணம், எதுவும் எங்கள் மன உறுதியைக் குலைக்காது.

அதிகாரம் கோடிக்கணக்கானவர்களின் இதயங்களிலே கோலேச்ச சனநாயகம் வித்திடுகிறது.

இழிமொழிகள், ஏளனம், பழிச்சொல் புறக்கணிப்பு, நயவஞ்சகரின் நாசகாரச்செயல்கள் அத்தனையும் தாங்கிக்கொள்கிறவன் தான் முழுமையான மனிதன்.

தோல்விகளால் நாம் துவழமாட்டோம். கபடரின் கல் நெஞ்சத்தால் கவிழ மாட்டோம்.

உணர்வுகள் என்றும் அறிவைக் குருடாக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை தட்டல்களும் கரகோசங்களும் ஒரு அரசியல் வாதியின் எதிர்காலத்தை உருவாக்குகிறது. கல்லெறிகளும் சொல்லெறிகளும் ஒரு அரசியல் வாதியை மயக்க நிலை தெளியவைக்கிறது.

சனநாயகம் பரவலாக்கப்பட்ட போது தான் தோட்டியும் துரைமகனுக முடிந்தது. பரம்பரை அரசுக்கட்டில் சரியத்தொடங்கியது.

''வைதிகச் சடங்கு'' என்ற புரட்டல் வாதத்தால் தமிழகம் மட்டும் தான் தாழ்ந்து கிடக்கவில்லை, நவீன ரோமா புரியிலும் இத்தகைய இலச்சணைகள் உண்டு.

உலுத்தர் தன் உறவால் போர் பறையை மறந்தோம் உப்பரிகையில் உழல்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையருவிகளிலும் ஆழ்கடலலைக ளிலும் கொடும் வனத்திலும் தமிழன் ஒருங்கே அச்சமின்று ஓயாது அலைந்துதி ரிந்தான் இயற்கையின் எழிலார்ந்த வீறு மிக்க தோற்றங்களிலே அவன் இடை யரு டாசமுடையவன் கமுதின் குலைகளி லும், தெங்கின் பாளைகளிலும் வாழை இளங்குருத்துகளிலும் பிறர்காணும் அதே அழகை அவன் அவற்றில் மட்டுமின்றி மலை பாம்புகளின் ஒய்யார வண்ண வளைவு களிலும் சிறுத்தைகளின் ஒயிலார்ந்த வீறு நடைகளிலும் காண முடிந்தது. அத்து டன் புதுநிலவும், புதுவழியும் காணும் துடிப்பில் அவன் என்றும் தளராத புத்தி ளமையும் புது முறுக்கும் எய்தினன்.

வாழ்க்கை என்பது ஒரு ஆராய்ச்சி இந்த ஆராய்ச்சியின் படிமங்களைப் பொறுத்தே வாழ்க்கையும் அமையும்.

சிலர் தங்கள் கொள்கைகளிலே ஞான ஒளியைப்பாய்ச்சி ஊன்றி நிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடத்து நடை முறைகளை மாற்றிக் கொள்கின்றனர் இந்த மாறுதல்களை நினைவில் கொண்டு அவர்கள் வாழ்க்கையை ஆராய வேண்டும்.

வன் முறையாளர்களுக்கு வாயிற் கதவு எங்கே திறக்கப்படுகிறதோ—எங்கே இல்லாமை நெளிகிறதோ — எங்கே சிலர் வாழ பலர் வதைக்கப்படுகிறதோ எங்கே உழைப்பவன் உருக்குலைந்து உயர்ந்தவன் மேலும் மேலும் உயர்ந்து கொண்டுபோகிருனே— எங்கே வறுமையின் ஆதிக்கம் கொடி கட்டிப்பறக்கிறதோ—அங்கெல்லாம் நெருப்புக்கேற்ற பஞ்சுமெத்தைபோன்று வன் முறையாளர்களுக்குகேற்ற வாயிற் கதவுகள் திறந்தவண்ண மிருக்கும்.

தமிழன் மரபினது புத்தம்புது எழுச்சி வரலாற்றுக்காப்பியங்களுக்கு கதாபாத்திரங்கள் தேவை கோழைத்தனமான கூளாங்கற்களைப்போன்ற, கதாபாத்திரங்களெல்ல, வீரஞ்செறிந்த பளிங்குக்கற்களையுடைய கதாபாத்திரங்கள் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக நனி சிறப்புக்கு காரணம், கதாபாத்திரங்களின் உணர்ச்சி பாவமே—உணர்ச்சிபாவம் கெட்டு விட்டால் நல்ல கதையும் பொல்லாத கதையாகிவிடும்.

கற்பனுவாதிகள் அறிவு நெகிழ்சியின் ஞெளி களாகின்றன.

சிந்தனை நெகிழ்ச்சியில் உருவான தே சாக்கிரட்டீசின் நச்சுக் கோப்பை, சிந்தனைப் புரட்சி இல்லாதிருப்பின் சாக்கிரட்டீஸ் கதாபாத்திரமே இருந்திருக்காது—

ஹிட்லரும், நெப்போலியனும், முசோலினியும் சர்வாதிகாரிகள் என்று தெரிந்திருக்கும் நாம் கரிபால்டியையும் கமால் பாட்சாவையும் அலக்சாந்தரையும் தெரியாமலிருப்பது—சரித்திரத்தின் குற்றமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதங்கள் உருவத்திலில்லை இதயத்திலுண்டு மனபேதம் உருவ பேதத்தை விடக் கொடியது. பல்வேறு உருவில் இந்த மனபேதம் விசுவரூபம் எடுத்து ஆட்டிப்படைக்கும்.

அமைதியின் அடித்தளத்தில் தான் ஆர்பாட்டமும் கலவரமும் அரும்புகிறது. இவற்றின் அந்திமத்தில்தான் அமைதியும் பிறக்கிறது. தரணியின் அதிர்வு—தென்றலின் சீற்றம்—கடலின் கொந்தளிப்பு—சான்று பகரப்பொருந்தும்.

ஓசை எழுப்பாமல் அழுகின்ற ஊமை உள்ளங்கள் பல, அவற்றில் விம்மல்கள் விளம்பர மாவதில்லை. கண்களிலிருந்து பீறிட்டுப்பாயும் கண்ணீர் காட்டாறுக சீறிட்டுப்பாய்ந்தோடும் போது மட்டும், துன்பத்தின், சுமைகளின், ஆழப் இதய ஓசையை நாதமெழுப்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ண ஒளியின் தீச்சுடர் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகலாம், காற்றேடு கலந்து நாட்டியப்பதுமையாய் சுழன்று வரும்போது—அங்கு கண்ணுக்குக் குளிர்ச்சி இருக்காது-கருத்துக்கு தேன்சுளையாக இருக்காது.

''தியாகம்'' ''தியாகம்'' என்று அரசியலில், கலைஇலக்கியத்தில், புனைந்திருக்கும் ஏட்டின் எழிலார்ந்த திருப்பம் தேடித்தந்துள்ள அத்தியாயங்கள் அநேகம்—தெருவோரத்தில் பிச்சை எடுக்கும் பிச்சைக்காரனின் வாழ்க்கையும் தியாகமாகத்தானே இருக்க வேண்டும்.

எது உண்மையான தியாகம்—வீட்டில் பூச்சி விளக்கொளியில் மயங்கி சுழன்று மடிவதும்—தியாகம்தான் கூண்டுப்பறவை இறக்கை ஒடிந்து குரல் வளை நசுக்கப்பட்டு மரணிப்பதும் தியாகம் தான் சிற்றெறும்பாய் சிறுத்தையின் காதில் நுழைந்து செத்துமடிவதும் உண்மையானதியாகம் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் என்று சொல்லாமல் மகா ஜனங்கள் என்று சொல்வதால் என்ன குற்றம் ஏற்பட்டுவிட்டது என்று கேட்கிருர்கள் — குற்றம் ஏதும் வந்துவிட வில்லை. தமிழர்கள் தமிழை மறந்துவிட்டனர் என்கின்ற பழியை பிற்காலம் நம் மீது சுமத்தும் அவ்வளவு தான்.

சாரம் இல்லை நன்றி நவிலல் தான் இருக்கிறது. பொக்கிசத்தார் மறைந்தார். பொருளாளர் பவனி வருகிருர், நமஸ்காரம் மறைந்தது. வணக்கம் தான் எங்கும் நிறைந்திருக்கிறது. இந்த எழுத்துமாற்றத்திலிருந்து மக்களின் எண்ணத்தில் உருவானதே இந்த மாற்றங்கள்.

காலத்துக்கேற்ற கருத்துக்களே தேவை! கருத்துக்களுக்கேற்ற காலம் அல்ல, காலத்திற் கொவ்வாத கருத்துக்களை ஒதுக்க வேண்டும், போக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறையானிலிருந்து "புற்றீசல்" அவதாரமெடுப்பதையும், மாமிசப் பிண்டத்திலிருந்து நெளியும் புழு உருவெடுப்பதையும், கல்லிலிருந்து கடவுள் அவதாரமெடுப்பதையும், ஒப்பிட்டுப் பார்க்கும் போது, முன்னது இயல்பு— பின்னது பிறழ்வு!

படைப்பாளி ஒருத்தனிருக்க அந்த படைப்பாளிக்குப் புகழ்பாடும் அவதாரங்கள் கணக்கிலடங்காதிருக்கவே, கடவுட்கொள்கையற்றதாய் விட்டது.

கோவிலுக்குள்ளிருக்கும் சாமிக்கு சக்தி உண்டோ, இல்லையோ, கட்டிடக்கலையின் சித்திரவேலைப்பாடு ஓவியனின் கைத்திறனைப்புகழ் பாடுகிறது.

ஆசாரத்தின் பூணூல் விசாரம், மூடக்கொள்கையை யொட்டி பதிந்த ஆல வட்ட விழுதுகள் சல்லிவேர் முதல் ஆணி வேர் வரை ஆழமாக பற்றி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டனின் வீரச் செங்குருதிக் கொப்புளமே ஒரு தலைவனின் சிம்மாசனக்கிரிடம்.

இயல், இசை, கூத்து, ஆகிய முத்தமிழும், செந்தமிழர், பண்பாட்டின் நிலைக்கண்ணுடியாகும்.

"கூத்திலெக்கியம்'' முத்தமிழ் வாயிலாக வடிவம் காட்டுவதால் மட்டுமே, அதன் தன்மையும், தகமையும், பொலிவு மாருது மெருகூட்டுகிறது.

தாழ்வுச்சிக்கல் என்பது, ஒரு மனிதனை எவற்றையும் துணிந்து செய்யத்தூண்டும், பயங்கரவாதச்செயலாகும், இவற்றிற்கு அடிகோலி நிற்கும், முட்புதர்கள், பளிங்குமண்டபவாசற்படியில் மட்டுமல்ல, குச்சு வீட்டின் சாக்கடையோரத்திலும் உருவாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பிலே மலர்கள் மலர்ந்தாலோ கிளை நெளியும், மலர், மகரந்தம் சேர்த்தாலோ மலர்பிஞ்சாகிவிடும் பிஞ்சு காயாகி கனியாகி விட்டாலோ, வளைந்து தகிளை நாணம் மேலிட்டு தாழ்ந்தேவிடும்.

தேன்கூட்டுக்கு கல்லெறியும், கரங்களின் துணிவும், குளவிக்கூட்டுக்குக் கல்லெறியும், கரங்களின் பளுவும், வேறுபட்டிருப்பதில்லை, மாறுக முன்னதில் துளிரசமும், பின்னதில், ரகளை ரசமும், பொதிந்துததும்பும், இதய யோட்டத்தின் நோக்கமே, கரங்களின் ஏவலில் தரமறியாது எதையும் செய்யத்தூண்டிவிட்டு வேடிக்கைபார்ப்பதில் அலாதி ஆர்வம் போலும்!

பெரும்பான்மை பலம் தான், ஒரு அரசுக்கட்டிலின் தூண்கள் சிறுபான்மை படுக்கை விரிப்பாக மட்டுமே இருக்கும், படுக்கை விரிப்பை தூக்கி எறிந்து விட்டால் பாதிப்பிருப்பதில்லை, தூண்களை பெயர்த்தெறிந்து விட்டால் நிலைமை என்ன வாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பு வாதம் காலராவை விட வேகமாகப்பரவும் ஒரு தொற்று நோய், பிஞ்சு உள்ளங்களிலே இது பரவத்தொடங்கிவிட்டாலோ எதிர்கால இன ஐக்கியத்தை, சீராக்குவதென்பது மிகக் கடினம், பொறுப்பற்ற சிலர் தூவிய இத்தகைய கொடிய விசவித்துக்களை பிடுங்கியெறிந்து நிவாரணம் பெற முடியாத தொன்று. என உலகம் கண்டறிந்த பெரும் உண்மை.

நக்கீரன் தீட்சண்யத்தின் ஒய்யாரச்சுடரொளியில் நெற்றிக்கண்ணை ஒப்பிட்டு உவகைபூரித்து ஒளிர்ந்தான் தன் குற்றவடுவை பெரிதாக்கி பேரின்பம் கண்டான்.

உத்திகள், உமிக்கொப்பாகவிருந்தால், உதிரிகள் உருவாகும், படிந்திருக்கும் படிமத்தைக் கொண்டே, புனைப்புகள் பரிசுத்தமும் தூய்மையும் ஒருங்கு சேர்ந்து அழகோவியமாக அமைந்து விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேளின் கொடுக்கையில் சுரந்து கிடக்கும், ஒரு வகைத்திராவகம், அதற்கு உயிர் சத்தாம். பிற உயிர்களுக்கு அது தீண்டிவிட்டாலோ நஞ்சாகி விடுகிறதே. இதை பௌதிகமாற்றமென்பதா?

ஒய்யார மயிலாட்டம், என்கிறோமே, வெறும் வார்த்தை அலங்காரம் என்று நினைத்து விடாதீர்கள், இந்த மயிலாட்டத்தில் தான் அதுகருக்கொள்வது, உடலிணைப்பு அற்ற தூய்மையான உறவால் கருத்தரிக்கும் பாங்கு எதுவாக இருக்கமுடியும்.

எழிலார் திருமேனி மெல்லிடையின் இறுக்கம்! ஏந்திழையின் இதழமுதது முத்துப்பல் வரிசையின் முத்தாரம், செந்தேன் அவளதரம் தோய்த்து, கொடியிடையை ஆர அரவணைத்துப்பெறும் இன்பத்துக்கோர் எல்லையுண்டோ? என்பதெல்லாம் சொல்லலங்கார வர்ணிப்பில் மட்டுமே, சுவைததும்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தம்பி தருகின்ற எழிலார் ஏடு, தேங்கிக்கிடக்கும் தடாகத்துத் தண்ணீரல்ல, புகையெழுப்பும் தீத்தணலல்ல, விடுதலைக்கனல் பரப்பும், பெருக்காறு! செந்நெருப்பு மூண்டிடும் தீக்காடு! தீயோர், இதிலிருந்து தப்ப முடியாது.

மந்தமாருதத்தின் பாசறையில் மான உணர்ச்சியை விலை கூறி விற்ற விற்பன்னர்களைத்தவிர மற்றையோர், வெஞ்சிறையில் தான் இருக்க முடியும்.

காலமென்னும் கொடு அரக்கன் சாவென்னும் கொடுங்கரங்களால் ஒரு சான்றோனைப் பிடுங்கி எடுப்பதில் தயக்கம் காட்டுவதில்லை, அவனது ஆற்றலின், வெளிப்பாட்டை, நுண்ணறிவின் நுட்பத்தை பிரிவென்னும் பேழைக்குள் அடக்கி, அழுத்தி, விட முடியுமா?

அரசமைப்பதென்பது முதுகு சொறியவும், படிக்கல்லாகத்தேயவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சில்கனிக்காக ஏங்கிக்கிடப்ப தையும் ஒக்கும். அரசேக்சுவதென்பது அதிகாரம் பெறுவது, முனேக்கல்லாக நிற்பது தனித்துவத்தை நிலே நாட்டுவ தற்கு ஒக்கும்.

இப்படை தோற்கின் எப்படை வெல்லும்.

சிலர் அந்தரங்கமான கோட்பா டுகளே வெளியே சொல்ல முடியாமல் வடிகால்கள் தேடிக்கொண்டிருக்கிறூர் கள், இதில் சந்தனமும் இருக்கலாம், சாக்கடையும் இருக்கலாம்.

தப்புரட்சி என்பது தெய்வ நிந்தனேயன்று! சிந்தனேயில் தெளிவு! அறிவாற்றலின் பரிபக்குபம். இவைகளின் வெளிப்பாடே மதப்புரட்சியின் அடித் தளம்.

அறிவுக்கொவ்வாத மூடக்கொள் கைகள் கண் மூடித்தனமான 'சித்தாந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயக்கங்கள், பகுத்தறிக்கொவ்வாத சம்பிரதாயங்கள், இருக்கும் வரை சுரண்டும் வர்க்கமும் சுரண்டப்படுகின்றவர்க்கமும் இருந்துகொண்டே இருக்கும்.

கருமை நிறம் ஒரு நாட்டின் இழிவைக்குறிக்கும். அறியாமையைக்காட்டும் சிவப்பு நிறம் அதை மாற்றும் புரட்சிச்சின்னம், இருளை நீக்கும் ஒளிப்பிழம்பாக உருவெடுக்கும் போது கருமை மறைந்து தனிச்சிவப்பாக, செந்நிறமாக உருமாறும்.

சுகயோகி சூழலையும், சுக்காணையும் தவறிவிட்டு தத்தளிகிறுன், அவன் தத்தளிப்பிற்கும், தத்தரிப்பிற்கும் பழக்கதோசம் தான் அவனை இந்நிலைக்காளாக்கியது.

யோகிக்கு புலனடக்கம்! ஞானிக்கு நாவடக்கம்! தேனிக்குதித்திப்படக்கம்! பூவைக்கு நுண்கலையும் அடங்க வேண்டும்! துவறின் இழிமர பென்னும் இலையான்கள் அகத்தையும், புறத்தையும மொய்த்துப் பாழாக்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்குமுறைக்கு எதிராகத்திரண்டெழுந்த சமுதாயத்தின், வரலாறு மட்டுமே உயிர் துடிப்பாகவுள்ளது.

பொருந்தா மனத்தால் விளையும் சீர்கேடுகளே பாரிய குற்றங்களுக்கு அடித்தளமாக வுள்ளது.

நாட்டின் நலிவகற்ற அரசு மும்முனைப் போராட்டத்தை நடத்தும் காலகட்டத்தில் தானியக்களஞ்சியங்களில், அகவிலையையும், பதுக்கலையும், வணிகனும், பாவனையாளனும், உரமூட்டி வளர்த்திடத்துணியும் விந்தையை சட்டங்களால் மட்டும், சீராக்குவதென்பது கடினம், இரு பாலாரும், ஏழைப்பங்காளர்களாக மாறவேண்டும், அதற்கான மனப்போக்குகளை, சமூகச் சேவையாளர்கள் போதிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாட்டிலே கலைவளம் குன்றிவிடவில்லை கவிதா ஊற்று வரண்டு விடவில்லை. பாவம் பாழாகி விடவில்லை பழமை புகைந்து போகவில்லை. இந்த கலைவளமும் கவிதா ஊற்றும், புலமைப் பெருக்கும் தூய்மையான எண்ணங்கருத்துகளைப் பக்குவமாகப்புகுத்த உதவ வேண்டுமே யொழிய மேலிட மறைவிடவர்ணனைக்குக் கருவியாக அமையக்கூடாது.

நாம் எங்கு செல்லுகிறோம், என்பதல்ல, சிந்தனை எல்லோரும் ஓரிடம் நோக்கியே செல்கிறோம், செல்லும் பாதைகள் தான் பல கோணங்களிலிருக்கின்றன. பேராறும் சிற்றாறும் ஒரு குறித்த எல்லைக்குள் சங்கமிப்பதைப் போன்று, நாமும் கால் நடையாகவும் கட்டை வண்டியிலும் பேருந்துகளிலும் விமான மூலமாகவும் செல்கிறோமே, இந்த ஏற்றதாழ்வுப் பயணத்தின் விளைவுகளை அனுமானிப்பதே பகுத்தறிவின் இலக்கணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல தோழமை, நல்ல உரையாடல், இவையிரண்டுமே நல்லொழுக்க வாழ்வின் நாடி நரம்புகள்.

நாட்டுப்பற்றினையும், தேசிய நோக்கினையும், நெறி விளக்க கோட்பாட்டினையும் வலுப்படுத்தும் அரசு யாப்புக்கள் சமுதாயத்தை சீர்படுத்தும் அரணாகும்,

எதிர்ப்புக்களைத்தாங்கிக்கொள்ளும், வலுவான நெஞ்சுறுதியைக் கொண்டு ஒரு மனிதனின் காழ்ப்புணர்ச்சியை குறைத்து மதிப்பீடு செய்யும் மடமையைப் போக்குவோம்.

எங்கு பேரராட்டத்தின் துடிப்பான கோசம் எழுப்பப்படுகிறதோ, அங்கு எதிர்நீச்சல் போடும் கருங்காலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் இருக்கத்தான் செய்வார்கள், எழுப்பப்படும் சுலோகத்தை முறியடிப்பதற்கென்று முளையிலேயே அரும்பிவிடுவதில்லை, தேவைகளைப்பகிர்ந்து கொள்வதில் ததும்பி நிற்கும் திறனுற்றலின் வெளிப்பாட்டு உணர்வே இவை.

சுகபோகிக்கு அடிப்படைத்தத்துவம் தெரிவதில்லை, மன உளைச்சலை அடிமனதோடு அடக்கிக்கொண்டு ஏழ்மை இருட்டில் இடரி விழுந்து கிடக்கும் சகவாசியைக்கண்டு பிறந்த ஏளன உந்து சக்தியே அவனை சுகபோகியாக்கி விட்டது.

விலையை ஏற்றிடுவோர் விளைந்ததைப்பதுக்கிக் கொள்வோர் நாட்டை நாசமாக்கும் நடமாடும் நோய்கள், ஊழல், ஊதாரித்தனம், லஞ்சம், வாங்குதல், ஆகிய கேடுகளைச் செய்வோர் நாட்டின் அவமான சின்னங்கள். உற்பத்தித்துறைக்கு முட்டுக்கட்டையிடுவோர் உற்பத்திக்காகப்பாடுவோரின் வயிற்றிலடிப்போர், சமுதாயத்திற்கே விரோதிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அடுத்த வெளியீடு :

↓

நூறு கவிஞர்களின் புதுக்கவிதைகள் தொகுப்பு வெளியீடாக வெளிவரும் தரமானதும், தகுந்ததுமான கவிதைகளை எழுதி அனுப்புங்கள்.

நிர்வாகி :

சிருஸ்டி இலக்கிய வாசகர் வட்டம்.
95, புதிய சோனகத் தெரு,
கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராயிரம் ஆண்டுகளாய்
அன்னைத் தமிழ் தவமிருந்து
பெற்ற தலை மகனே !
உருண்டு சுழலும் பூமிப் பந்தலில்
எங்கெங்கு தமிழ் மகன்
இருக்கின்றானோ அவன்
நெஞ்சமெல்லாம் தங்க சிம்மாசனம்
போட்டு யிருக்கும் பெரு மகனே !

கனல் நடை பொங்கும்
புனல் நடை யெல்லாம்
ஒன்று சேர தன் உரை நடையால்
வெற்றி கண்ட கோமானே !
நோக்கு மிட மெல்லாம்
களி ஊற்றின் சுவைச் சாறாய் படை
சூழ வீற்றி ருக்கும் தலை மகனே !

மு. க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உண்பதற்காக வாழாதே வாழ்வதற்காக உண்.

தோழர் மன்சூர் ஒரு அதிர்ஷ்ட எண் நிபுணர், தொழிலதிபர், பொது நலச் சேவையாளர், அன்பும் பண்பும் நிறைந்த உயர்ந்த உத்தமர்.

# MUNSSOOR

A SPECIALIST IN NUMEROLOGY

**121 1/1, First Floor, Bankshall Street,**

**PETTAH - COLOMBO 11.**

CEYLON (SRI - LANKA.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org